DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**Case No: CC.No. 155/2023**

Deposition of witness for Prosecution அ.சா. 4

Name : செல்வம்
Father/ Husband Name : பெரியசாமி
Village :
Taluk :
Calling :
Age :

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5ஆம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 20.02.2026.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1.** நான் தற்போது திருவேகம்புத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் மகாரஜா அவரையும் அவருடைய கையொப்பத்தையும் நன்கு தெரியும். அதனால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அ.சா.1 தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை கு.எண்.3/2022 இதச.பிரிவுகள்.147,294(b),323,324,506(1), 4 of TNPHW Act ஐபதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதன்பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

**2.** பின்னர் காயம் பட்ட சாட்சி அ.சா.1 க்கு சிசிச்சை அளித்த மருத்துவர் வைரவசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். **(அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின்**

**தன்மை குறித்து கருத்துரை அடங்கிய சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**பின்பு வழக்கின் சட்டபிரிவை இதச.பிரிவுகள்.147,294(b),323,326, 506(2), 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை சமுகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(மேற்படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவு செய்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை